# 74

# “பரிசேயர்களின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்”

## மத். 23:1–39; மாற். 12:38–40; லூக். 20:45–47, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

ஒரு நாள், இயேசு தமது அப்போஸ்தலர்களிடத்தில், “பரிசேயர் ... களின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்” என்று கூறினார் (மத். 16:6).[1] அவரது இந்த எச்சரிக்கையினால் அப்போஸ்தலர்கள் முதலாவது திகைப்படைந்தனர், ஆனால் கடைசியில் அவர்கள், “அவர் அப்பத்தின் புளித்த மாவைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று சொல்லாமல், பரிசேயர்களின் உபதேசத்தைக் குறித்தே அப்படிச் சொன்னார் என்று அறிந்துகொண்டார்கள்” (மத். 16:12).[2] இன்னொரு வேளையில், அவர் “நீங்கள் மாயமாகிய பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்” என்று கூறினார் (லூக். 12:1).

கிறிஸ்துவின் விரோதிகளில் பரிசேயர்களைக் காட்டிலும் அதிகம் விடாப்பிடியானவர்கள் வேறு எவரும் இருந்ததில்லை. பரிசேயர்கள் பங்கேற்காத பாடம் ஒன்றை நாம் மிக அரிதாகவே கொண்டிருந்தோம். அவ்வப்போது, இவர்கள் யார்,[3] இவர்கள் விசுவாசித்தது என்ன, மற்றும் இவர்கள் ஏன் கர்த்தரை வெறுத்தனர் என்பவற்றின்மீது நமக்கு உட்கண்ணோட்டக் கருத்துக்கள் தரப்பட்டுள்ளன. இருப்பினும், மத்தேயு 23 மற்றும் இத்துடன் தொடர்புடைய மாற்கு, லூக்கா சுவிசேஷங்களின் பகுதிகளைப்போன்று வேறு எந்த வசனப்பகுதியும் இவர்களைப் பற்றி அதிகமாக வெளிப்படுத்துவதில்லை. இயேசு தமது சீஷர்களிடத்தில், பரிசேயர்களின் புளித்தமாவுக்கு (செல்வாக்கிற்கு) எதிராக எச்சரிக்கை விடுத்தது ஏன்? மாய்மாலம் என்பதே பரிசேயர்களின் புளித்தமாவாயிருந்தது என்று அவர் கூறியது ஏன்? அந்தக் கேள்விகளுக்கு முழுமையாகப் பதில் அளிக்க, நாம் மத்தேயு 23ம் அத்தியாயத்தைப் படிப்பது அவசியமாக உள்ளது.

கர்த்தர் இந்த அத்தியாயத்தில் பேசியதை விட கண்டனம் செய்தலின் அதிகக் கடுமையான வார்த்தைகளை வேறு எவ்விடத்திலும் ஒருக்காலும் பேசியதில்லை. சற்று முன் நாம் படித்த பாடத்தில்,[4] அவர் பலமாகப்

பேசியது ஏன் என்பதற்கான - பரிசேயர்களின் மனநிறைவுக்குப் புறம்பே அவர்களில் சிலருக்கு அதிர்ச்சியளிக்க நம்பிக்கையாயிருந்தார் என்ற சாத்தியக்கூறு உள்ளிட்ட - பல சாத்தியக்கூறுகளை நாம் கண்ணோக்கி னோம். இந்த உரைக்கு இன்னும் ஒரு நோக்கத்தையும் சேர்க்க வேண்டும்: உங்களுக்கும் எனக்கும் இது தேவை என்பதால் இது பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. இயேசுவினுடைய வார்த்தைகள் உலகளாவிய நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டுள்ளன; பரிசேயர்களின் பாவங் களைக் கொண்டு மனித குலம் முழுமையும் பெரிய அல்லது சிறிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. மற்றும் பரிசேயர்களைப் போல், நம்மில் பலர் நமது குறைபாடுகளைப் பற்றி அறியாதிருக்கின்றோம். கர்த்தருடைய "அதிர்ச்சி வைத்தியம்" நமக்கும் பயனுள்ளதாகலாம்.

பிறரிடத்தில் உள்ள மாய்மாலத்தை நாம் சுலபமாய்க் கண்டறிபவர் களாகக் காணப்படுகின்றோம்,[5] ஆனால் நமக்குள் அதைக் கண்டறிவது நமக்கு மிகவும் கடினமானதாக உள்ளது. நாம் மத்தேயு 23ஐப் படிக்கையில், தனிப்பட்ட சொந்த நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்திக் கொள்வோமாக.[6]

## விளக்கம்[7] (மத். 23:1-12; மாற். 12:38, 39; லூக். 20:45, 46)

கிறிஸ்து முதலில் கூட்டத்தாரை நோக்கி உரையாற்றினார், இதில் அவர் தொடர்ந்து கூறவிருந்த "ஐயோ"க்களுக்கான பின்னணியை அமைத்தார்: "வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக் கிறார்கள்" (மத். 23:2). வேதபாரகர்களும் பரிசேயர்களும் சுயமாய் நியமனம் செய்து கொண்டவர்களாக இருந்தனர், ஆனால் பொதுவாக அவர்கள், மோசேயின் நியாயப்பிரமாணம் பற்றி அங்கீகரிக்கப்பட்ட அதிகாரத்துவம் உடையவர்களாக மதிக்கப்பட்டனர். பரிசேயர்களுடன் வேதபாரகர்களும் பட்டியலிடப்பட்டிருந்தனர், ஏனெனில் அவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். "ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக் கொண்டு செய்யுங்கள்" (மத். 23:3அ). அதாவது, "அவர்கள் கூறுபவற்றில் மோசேயின் போதனையுடன் ஒத்துப் போகின்ற யாவற்றையும் செய்து கடைப்பிடியுங்கள்." "அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக் கிறார்கள்" (மத். 23:3ஆ). "அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யா திருக்கிறார்கள்" என்ற வார்த்தைகளில், பரிசேயர்கள்மீது இயேசுவின் கண்டனத்தினுடைய இருதயம் போன்ற மையப்பகுதி காணப்படுகிறது. NIVயில், "they do not practice what they preach" ("அவர்கள் பிரசங்கிப்பவற்றை அவர்கள் கைக்கொள்வதில்லை") என்றுள்ளது. முன்பே வலியுறுத்தியபடி, பரிசேயர்கள் மாய்மாலத்தினால் குற்றப்பட்டு இருந்தனர் (மத். 23:13, 14, 15, 23, 25, 27, 29; லூக். 12:1ஐக் காணவும்).[8]

"சொல்லியும் செய்யாதிருத்தல்" என்ற பரிசேயர்களின் வாழ்வு

*முறைக்குக் கிறிஸ்து உதாரணம் கொடுத்தார்: "சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக் கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள்; தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள்" (மத். 23:4). நியாயப்பிரமாணமே தன்னில் ஒரு சுமையாக இருந்தது (அப். 15:10), ஆனால் அவர்கள் தங்கள் பாரம்பரியங்கள் என்ற கனத்த பாரத்தைக் கூட்டியிருந்தனர் (மாற். 7:3). நியாயப்பிரமாணத்தையும் பாரம்பரியங்களையும் மற்றவர்கள் சுமக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர், ஆயினும் தாங்கள் தனிப்பட்ட வகையில் பிரமாணத்தைக் கடைப்பிடிக்காமல் தவிர்ப்பதற்கான வழிவகைகளை அவர்கள் கண்டுபிடித்து வைத்திருந்தனர்.[9] இதைக் குறித்து முந்திய உதாரணம் ஒன்றை, வயதான பெற்றோர்களைக் கவனிப்பதைத் தவிர்ப்பதற்கு அவர்கள் கொண்டிருந்த "கொர்பான்" என்ற தட்டிக்கழித்தலில் கண்டிருந்தோம் (மாற். 7:11-13). கட்டுப்பாடு எதுவும் உள்ளடங்காமல் ஆணையிடுதல் எவ்வாறு என்பது பற்றிய இன்னொரு உதாரணத்தை நமது பாடத்திற்கான வேத வசனப் பகுதியில் நாம் காணலாம் (மத். 23:16-22).*

*இருந்தபோதிலும், பரிசேயர்கள் மிகவும் பக்திமான்கள் என்று மற்ற ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும் என்று அவர்கள் [பரிசேயர்கள்] விரும்பினர்: "தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று செய்கிறார்கள்; தங்கள் காப்பு நாடாக்களை அகலமாக்கி" (மத். 23:5அ). "காப்பு நாடாக்கள்" என்ற வார்த்தையானது "பாதுகாத்தல், பத்திரப்படுத்துதல்" என்று அர்த்தப்படுகிறது.[10] இந்தச் சொற்றொடரை யூதர்கள், வேத வாக்கியங்களின் குறிப்பிட்ட சில பகுதிகளை எழுதி வைத்துள்ள சிறு தோல் பெட்டிகளைக் குறிப்பிடப் பயன்படுத்தினர். அவர்கள் இந்தச் சிறுபெட்டிகளைத் தங்கள் கைகளிலும் நெற்றிகளிலும் கட்டிக்கொண்டனர் மற்றும், இவற்றைத் தங்கள் வாசல் நிலைகளில் ஆணியில் அடித்து வைத்தனர். இந்த மனிதனால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரியமானது உபாகமம் 6:8, 9[11]ன் நேரடியான/சொல்லுக்குச் சொல்லான விளக்கவுரையில் இருந்து விளைந்ததாக இருந்தது (உபா. 11:18-20ஐயும் காணவும்). பரிசேயர்கள் தங்கள் தோல்பெட்டிகளை மற்ற மக்களின் பெட்டிகளைக் காட்டிலும் பெரிதாக்கியதினால் "தங்கள் காப்புநாடாக்களை" அகலமாக்கினர்.[12]*

*அதே வரியில் இயேசு, "[அவர்கள்] தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதாக்கி" என்று[ம்] கூறினார் (மத். 23:5ஆ). இஸ்ரவேலர்களுக்கு நியாயப்பிரமாணத்தை நினைவூட்டுவதற்காக அவர்கள் தங்கள் வஸ்திரத்தின் "நான்கு மூலைகளிலும்" தொங்கல்களை ஏற்படுத்திக் கொள்ளும்படி மோசே அறிவுறுத்தியிருந்தார் (எண். 15:38, 39; உபா. 22:12).[13] பரிசேயர்கள் தங்கள் நினைவுகூருதலின் தொங்கல்களை மற்ற ஒவ்வொருவரின் தொங்கல்களைக் காட்டிலும் நீளமாக்கிக் கொண்டனர்.*

*மாற்கு மற்றும் லூக்கா ஆகியோரின் சுவிசேஷ விவரங்களின்படி, வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்கள் ஆகியோரின் பகட்டான காட்சிப் படுத்துதல்களுக்கு இயேசு இன்னொரு உதாரணத்தைக் கூடுதலாகக் கூறினார்:[14] அவர்கள் "நீண்ட அங்கிகளைத் தரித்துக்கொண்டு திரிய ...*

*விரும்பி[னர்]'' (மாற். 12:38; லூக். 20:46ஐக் காணவும்). தரையைக் கூட்டிச்சென்ற நீண்ட அங்கிகள் "செல்வந்தர்கள் மற்றும் கல்விமான்களின் உடைகளாக" இருந்தன (மாற். 12:38; LB).[15]*

*இந்த மதத் தலைவர்கள் இப்படிப்பட்ட ஒரு காட்சியை காண்பித்தது ஏன்? மனிதர்களிடத்தில் மதிப்பை பெறுவதற்காக: "[அவர்கள்] விருந்து களில் முதன்மையான இடங்களை ... [விரும்பினார்கள்]" (மத். 23:6அ). அது விருந்தளிப்பவருக்கு மிகவும் அருகாமையில் உள்ள இடமாக இருந்தது (லூக். 14:7-11ஐக் காணவும்). "[அவர்கள்] ... ஜெப ஆலயங்களில் முதன்மை யான ஆசனங்களை ... [விரும்பினார்கள்]" (மத். 23:6ஆ). "முதன்மையான ஆசனங்கள்'' என்பவை ''வாசிப்பவரின் மேஜைக்குப் பின்புறத்தில், சபையாரை நோக்கி இருந்த இருக்கைகளின் அரைவட்ட வடிவிலான வரிசையாக" இருந்தன.[16] "[அவர்கள்] சந்தை வெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் 'ரபீ, ரபீ' என்று அழைக்கப்படுவதையும் விரும்புகின்றார்கள்" (மத். 23:7). தங்களுக்கு முன்பாக மனிதர்கள் வணங்கி, "ரபீ, பெரியவர்!" என்பது போன்ற பட்டப்பெயர்களினால் வாழ்த்துவதை அவர்கள் விரும்பினார்கள்.*

*''ரபீ'' என்ற சொற்றொடர் இங்கு குறிப்பிடப்படுதலானது, மத ரீதியான பட்டங்கள் பற்றிக் கர்த்தரால் உரைக்கப்பட்ட ஒரு சுருக்கமான உரையைத் தூண்டுகிறது:*

> *நீங்களோ, ரபீ என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து[17] ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரரா யிருக்கிறீர்கள். பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லா திருங்கள்; பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக் கிறார். நீங்கள் குருக்கள் என்று அழைக்கப்படாதீர்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார் (மத். 23:8-10).[18]*

*மக்களை "ரபீ," "பிதா" அல்லது "நடத்துகிறவர்" என்று அழைக்கக் கூடாது என்பதாக இயேசு கூறியபோது, அது அச்சொற்றொடர்கள் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு விஷயத்தையும் கண்டனம் பண்ணுவதாக இருந்ததில்லை. "போதகரின்" ஊழியத்தைச் செய்பவர்களைக் குறித்தும் (எபே. 4:11) அல்லது "நடத்துகிறவர்" என்பவரைக் குறித்தும் (எபி. 13:17, 24) புதிய ஏற்பாடு குறிப்பிடுகிறது, மற்றும் உங்கள் பெற்றோரில் ஆணை நீங்கள் "பிதா" என்று அழைப்பதில் எந்தத் தவறும் இருப்பதில்லை (எபே. 6:2).[19] மாறாக, கிறிஸ்து இவைகளை மத ரீதியான பட்டப்பெயர்களாகப் பயன்படுத்துவதையே கண்டனம் செய்தார்: "தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலரை" எஞ்சியவர்களுக்கு மேலாக உயர்த்துவதற்கு விசேஷப் பட்டப் பெயர்களைப் பயன்படுத்துதல். "நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக் கிறீர்கள்" என்பதை இயேசு வலியுறுத்தினார். மாபெரும் அப்போஸ்தலர் "சகோதரர் பவுல்" என்று மட்டுமே இருந்தார் (2 பேது. 3:15) மற்றும் ஒரு உடன் வேலையாளாக இருந்த பெண்மணி "சகோதரி பெபேயாள்" என்று மட்டுமே இருந்தார் (ரோமர் 16:1). இவ்வகையான குடும்பச் சொல்லாக்கம் எந்த ஒரு கிறிஸ்தவருக்கும் போதுமானதாக இருக்க வேண்டும்.*

## *பழிவுரை (மத். 23:13-36; மாற். 12:40; லூக். 20:47)*

*அது, பரிசேயர்களுக்கு இயேசு உரைகூற வேண்டிய வேளையாக இருந்தது. அவர்களிடத்தில் திரும்பிய இயேசு, எட்டு "ஐயோக்களை" உரைத்தார். அவற்றில் ஏழு ஐயோக்கள் மத்தேயு சுவிசேஷத்தில் காணப்படு கின்றன, மாற்கு மற்றும் லூக்கா ஆகியோரால் பதிவுசெய்யப்பட்ட கர்த்தரின் வார்த்தைகளில் எட்டாவது ஐயோ கருத்தாகத் தெரிவிக்கப் படுகிறது.[20] கிறிஸ்துவின் கண்டனத்திற்குரிய வார்த்தைகள் "பேசப்பட்ட வற்றிலேயே மிகவும் பயங்கரமானவை!"[21] என்பவற்றின் மத்தியில் உள்ளன. இந்த வேளையில் இயேசு, பரிசேயர்களின் பாவங்களைத் தொகுத்துரைத்தார்.[22]*

**பாரம்பரியம் எதிர். சத்தியம் (மத். 23:13)**

*மேசியாவைப் பற்றிய அவர்களின் முன் அனுமானக் கருத்துக்கள், இயேசுவை ராஜாவாக ஏற்றுக் கொள்வதைத் தடைசெய்தன. அந்தக் கருத்துக்கள், அவர்கள் போதித்த மக்கள் அவரை ஏற்றுக் கொள்வதைத் தடை செய்தன.[23]*

**பணம் எதிர். இரக்கம் (மத். 23:14; மாற். 12:40; லூக். 20:47)**

*விதவைகள், தங்களைப் பரிசேயர்கள் பராமரிப்பார்கள் என்று நம்பியிருந்தபோது, அவர்களைத் தலைவர்கள் அனுகூலப்படுத்திக் கொண்டனர், அவர்களின் உடைமைகளைஅவர்களிடமிருந்து பறிக்கும் வழிகளைக் கண்டுபிடித்தனர்.[24] விதவைகளிடமிருந்து திருடுதல் என்பது தேவனுடைய கண்களில் எப்போதுமே இழிவான பாவமாக இருந்துள்ளது (யாத். 22:22-24; உபா. 27:19).*

**வெற்றிகள் எதிர். மனமாற்றம் அடைந்தவர்கள் (மத். 23:15)**

*யூதர்கள், யூதத்துவத்திற்குப் புறஜாதியாரை மாற்ற முயற்சிப்பதில் இராணுவ ஊழியத்துவத் தன்மையைக் கொண்டிருந்தனர் (வ. 15).[25] துரதிர்ஷ்டவசமாக, பரிசேயர்கள் மனம் மாறியவர்களைத் தேவனுக்கு உண்மையானவர்களாக ஆக்குவதற்குப் பதில் அதிகம் பரிசேயர்களாக ஆக்குவதிலேயே ஆர்வம் கொண்டிருந்தனர். தாங்கள் "வெற்றிக்கொண்ட" ஒருவரின் தவறான நம்பிக்கைகளை நீக்கும் வகையில் போதனை அளித்த வுடன், அந்த சீஷர் பெரும்பாலும் "முன்னோர் பாரம்பரியங்களுக்கு" அவர்களை விட இரு மடங்கு வைராக்கியம் உடையவராகிவிடுவார் (மாற். 7:3) - இவ்விதமாக அவர் அவர்களைப்போல் "இரு மடங்கு நரகத்தின் மகனாகி"[26] விடுவார்.*

**சௌகரியம் எதிர். உறுதிப்பாடு (மத். 23:16-22)**

*ஆணையிடுதல் என்பது இலகுவில் ஏற்படுத்தப்படக் கூடாது என்று பழைய ஏற்பாடு போதித்தது; அவைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டிய*

வைகளாக இருந்தன (எண். 30:2). இருப்பினும், ஆணையிடுதலானது ஆணையிடுபவரை கடமைப்பட்டவராக்காத வகையில் ஒரு ஆணையைக் கூறுவது சாத்தியமாக இருந்தது என்று பரிசேயர்கள் போதித்தனர் (மத். 23:16, 18). இந்தத் தர்க்கத்தின் தவறை இயேசு வெளிப்படுத்தினார் (வ. 17, 19-22). அவர் பின்வரும் எச்சரிக்கையைத் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு முன்னதாகக் கொடுத்திருந்தார் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்: ''நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; பரிச்சேதம் சத்தியம் பண்ண வேண்டாம்; வானத்தின்பேரில் சத்தியம்பண்ணவேண்டாம், அது தேவனுடைய சிங்காசனம். பூமியின்பேரிலும் சத்தியம்பண்ணவேண்டாம், அது அவருடைய பாதபடி" (மத். 5:34, 35அ).

### *சிறியவைகள் எதிர். பிரதானமானவைகள் (மத். 23:23, 24)*

தங்கள் தோட்டத்தில் இருந்து பறிக்கும் சிறு கீரைகளிலும் பத்தில் ஒரு பங்கைக் கொடுத்தல் என்ற அளவுக்குக் கீழே செல்லும் வரைக்கும் தசம பாகம் செலுத்துதல் போன்ற மதச் சடங்குகள் பற்றிப் பரிசேயர்கள் உணர்வுள்ளவர்களாய் இருந்தனர்.[27] அதே வேளையில், அவர்கள் தங்கள் இருதயங்களின் நிலை பற்றிக் கவலையற்றவர்களாய் இருந்தனர்: அவர்கள் "நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டார்கள்" (வ. 23அ[28]; மீகா. 6:8ஐக் காணவும்).

கர்த்தர் அவர்களை, "குருடரான வழிகாட்டிகளே,[29] கொசுயில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்களே'' என்று அழைத்தார் (மத். 23:24). பாதி நகைச்சுவையான இந்த ஒப்புவமையானது, பரிசேயர்களைத் தங்கள் குடிநீரிலிருந்து சுத்தமற்ற பூச்சிகளை நீக்குவதற்காக வடிகட்டியைப் பயன்படுத்துபவர்களாக (லேவி. 11:20, 23), அதே வேளையில் சுத்தமற்றதாக இருந்த ஒட்டகத்தை (லேவி. 11:4) விழுங்கத் தயங்காதவர்களாகச் சித்தரித்தது.

வசனங்கள் 23 மற்றும் 24ல் இயேசு, தேவனுடைய கட்டளைகள் சிலவற்றை "சிறியது" என்று கருதினாலும், எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிவதைப் பற்றி உணர்வுடன் இருத்தல் தவறு என்று கூறினாரா? இல்லவே இல்லை. அவர், "இவைகளையும் ['இலேசானவைகளையும்'] செய்ய வேண்டும், அவைகளையும் ['கனமானவைகளையும்'] விடாதிருக்க வேண்டும்" என்று கூறினார் (மத். 23:23ஆ).

### *மேற்பரப்பு எதிர். ஆவி (மத். 23:25, 26)*

வெளியில் சுத்தமாக ஆனால் உள்ளே அழுக்கு நிறைந்ததாக உள்ள பாத்திரங்களின் விவரிப்பைக் கிறிஸ்து பயன்படுத்தினார் (வ. 25; லூக். 11:39ஐக் காணவும்). பரிசேயர்கள் தங்கள் பாத்திரத்தின் உட்புறத்தைச் சுத்தமாக்கினால், வெளிப்புறம் தானாகவே சுத்தமாகும் என்று அவர் கூறினார் (வ. 26). அடுத்த முறை நீங்கள் பாத்திரத்தைக் கழுவும்போது இதை முயற்சி செய்யாதீர்கள். இது உண்மையான பாத்திரங்களுக்குப் பயன் படாது, ஆனால் இருதயங்களுக்கும் வாழ்வுக்கும் இது பயன்படும்!

*தோற்றம் எதிர். உண்மை நிலை (மத். 23:27, 28)*

*வெளிப்புறம் - உட்புறம் என்ற இன்னொரு நேரெதிர் நிலையை இயேசு பயன்படுத்தினார்.[30] பரிசேயர்கள், "வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை களுக்கு ஒப்பாயிரு[ந்தனர்], அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப் படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினா லும் நிறைந்திருக்கும்" (வ. 27). பரிசேயர்கள் வெளிப்புறத்தில் தேவபக்தி யுடையவர்களாய் இருந்தனர், ஆனால் உள்ளுக்குள்ளே அவர்கள் "மாய்மாலத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திரு[ந்தனர்]" (வ. 28).*

*சொல்திறமை எதிர். உண்மை நிலை (மத். 23:29-36)*

*பரிசேயர்கள், கடந்த காலத்துத் தீர்க்கதரிசிகளைக் கனம்பண்ணு வதாகக் காட்சியொன்றை ஏற்படுத்தினர் (வ. 29) மற்றும் தாங்கள், அந்தத் தீர்க்கதரிசிகளைக் கொன்ற தங்கள் முன்னோர்களைப் போல் இருந்த தில்லை என்று வலியுறுத்தினர் (வ. 30; வச. 37ஐக் காணவும்). அவர்களின் பிதாக்களைப் போலவே அவர்களும் இருந்தனர் என்று இயேசு கூறினார் (வ. 31, 32).[31] உண்மையில், அவர்கள் மிக விரைவிலேயே (வ. 36) தேவனு டைய பிரதிநிதிகளைக் கொலை செய்பவர்களாவார்கள் (வ. 34[32]). கிறிஸ்துவின் உறுதிப்பாடு பற்றிய நிரூபணம் அவர்களுக்குத் தேவைப்பட்ட தென்றால், அந்தக் கணத்திலேயே அவர்கள், தேவனுடைய சொந்தக் குமார னாகிய அவரைக் கொலை செய்யத் திட்டம் தீட்டிய உண்மையை ஆழ்ந்து சிந்திக்க முடியும். தேவனுடைய செய்தியாளர்களை அவர்கள் நடத்திய விதத்தினால், "நூற்றாண்டுகளாகக் குவிந்துள்ள நியாயத்தீர்ப்பு யாவும் இந்தச் சந்ததியின்மேல் வரும்" என்று கிறிஸ்து கூறினார் (வ. 35, 36;* LB*).*

## *புலம்பல் (மத். 23:37-39)*

*இயேசுவின் வார்த்தைகள் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பேசப்பட்டவைகளாயிருப்பினும், இன்னமும் அவை நமது காதுகளை எரிக்கின்றன. இருப்பினும் மீண்டுமாக, அந்த வார்த்தைகளின் கடுமையான தன்மையானது, கிறிஸ்து தமது விரோதிகளைக் கடிந்து கொள்ளுதல் என்பது தவிர வேறு நோக்கம் எதையும் கொண்டிருந்ததில்லை என்று நினைக்கக் காரணமாகி விடக்கூடாது. நண்பரோ விரோதியோ யாராயிருப்பினும் அவர் தமது உரையைக் கேட்பவர்களைப் பற்றி அக்கறை யாயிருந்தார். "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார்" என்று வேதாகமம் கூறுகிறது (நீதி. 3:12ஆ; எபி. 12:6ஐக் காணவும்). இந்த அத்தியாயத்தின் முடிவு வார்த்தைகளை, கடிந்து கொள்ளுகிற அன்பு ஊடுருவுகிறது.*

*இயேசு இதற்கு முன் எருசலேமுக்காக அழுதிருந்தார் (லூக். 19:41-44). இப்போது அவர், "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே!" என்று கூறினார் (மத். 23:37அ).[33] கடந்த காலத்தில் தேவனுடைய தீர்க்க தரிசிகளை எருசலேம் புறக்கணித்திருந்தது. இப்போது அது மேசியாவையே*

புறக்கணித்துக் கொண்டிருந்தது. "கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக[34] நான் எத்தனை தரமோ [பரிசேயர்கள் மற்றும் மதத் தலைவர்கள் பிறர் உட்பட] உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று" (வ. 37ஆ). "தேவனுடைய நகரமானது"[35] தேவனுடைய குமாரனைப் புறக்கணித்திருந்தது - அது அவரது இருதயத்தை உடைந்து போகச் செய்தது.

அந்த நகர மக்களின் கடின இருதயத்தின் காரணமாக, பயங்கரமான காலங்கள் வரவிருந்தன: "இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி விடப்படும்!" (வ. 38). "வீடு" என்ற சொற்றொடர், தேவாலயத்தைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது.[36] நாற்பதுக்கும் குறைவான ஆண்டுகளில், தேவாலயம் மற்றும் நகரம் முழுவதும் ரோமர்களால் அழிக்கப்படவிருந்தது.[37] அந்தப் பயங்கரமான சம்பவம் ஏற்கனவே நடைபெற்று விட்டதுபோல் கிறிஸ்து பேச முடிந்த அளவுக்கு, நிச்சயமானதாக இருந்தது.

இருந்தபோதிலும், இயேசு அந்த நகரத்தையும் அதன் மக்களையும் இன்னமும் அன்புகூர்ந்தார், அது தம்மை ஏற்றுக்கொண்டு தப்பிக்க வேண்டும் என்று ஏங்கினார்.[38] அந்த ஏக்கம் அவரது முடிவு வார்த்தைகளில் சுட்டிக் காண்பிக்கப்படுகிறது: " 'கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்' என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்!" (வ. 39). வசனம் 39ன் முதல் பகுதியானது மேசியாத்துவ சங்கீதம் ஒன்றிலிருந்து [சங். 118] வசனம் 26ன் முதல் பகுதியாக[39] வரும் மேற்கோளாக உள்ளது மற்றும் இது மேசியாவின் வருகை குறித்து அகம் மகிழுதலைக் குறிக்கிறது. ஒரு சில நாட்களுக்குப் பின்பு, கிறிஸ்து எருசலேம் நகருக்குள் பிரவேசித்த போது, இந்த வார்த்தைகள் நகர முழுவதிலும் எதிரொலித்தது (மத். 21:9; மாற். 11:9; லூக். 19:38; யோவா. 12:13). துரதிர்ஷ்டவசமாக, அந்த நகரின் குடிகள் தங்கள் வார்த்தைகளின் மறைகருத்தைப் புரிந்துகொண்டிருந்த தில்லை. அவர்கள் இயேசுவை (தங்கள் இரட்சகரும் ஆண்டவரும் என்ற வகையில்) மீண்டும் "காண" எப்போதாவது விரும்பினால், அவர்கள் தங்கள் இருதயங்களில் இருந்து இந்த வார்த்தைகளைப் பேசவேண்டும். அதுவே எருசலேமின் ஒரே நம்பிக்கையாக இருந்தது.[40]

## முடிவுரை

இந்தப் படிப்பை நாம் முடிக்கையில், நமது வேத வசனப் பகுதியில் இருந்து மூன்று முக்கியமான சத்தியங்களை நாம் மீண்டும் நினைவுக்குக் கொண்டு வருவோம்:[41]

(1) தேவன் மாய்மாலத்தை வெறுக்கின்றார். நாம் ஒவ்வொருவரும் நமது சொந்த இருதயத்தைப் பரிசீலனை செய்யக் கடவோம்.

(2) தேவன் விசுவாசத்தைக் கேட்கின்றார். நாம் ஒவ்வொருவரும், "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" என்று கூறி அதை அர்த்தப்படுத்துவோமாக.

*(3) தேவன் கீழ்ப்படிதலை வற்புறுத்துகின்றார். கர்த்தர் நம்மிடத்தில், ‘‘கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ [உன்னைக்] கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உனக்கோ மனதில்லாமற் போயிற்று!’’ என்று ஒருபோதும் சொல்லாதபடிக்கு, நாம் ஒவ்வொருவரும் உடனடி யாகப் பதில்செயல் செய்யக் கடவோம்.*[42]

---

*குறிப்புகள்*

*[1]இயேசு தமது எச்சரிக்கையில் சதுசேயர்களையும் ஏரோதியர்களையும் கூடக் குறிப்பிட்டார் (மத். 16:6; மாற். 8:15), ஆனால் இந்த எடுத்துரைப்பில் பரிசேயர்களின் மீதே வலியுறுத்தம் செய்யப்படுகிறது. [2]நீங்கள் இந்த வரலாற்றை அதிக விவரமாகக் கூற விரும்பலாம். [3]பரிசேயர்களைப் பற்றிப் பொதுவாக ஒரு சுருக்கமான மறுகண்ணோட்டத்தைத் தருவதற்கு நீங்கள் விரும்பலாம். இந்தத் தொடரில் அவர்களைப் பற்றிய பல குறிப்புகளில் “கிறிஸ்துவின் வாழ்வு, 1” என்ற புத்தகத்திலும் மற்றும் இந்தப் புத்தகத்தில் உள்ளவையும் அடங்கும். [4]இது, “வெற்றியாளர் ... மற்றும் இன்னும் திறமைசாலி!’’ என்ற பாடம் வேதாகம வகுப்பின்போது முன் வைக்கப்படுவதாகவும் இந்தப் பிரசங்கம் காலை ஆராதனை ஊழியத்தின்போது பிரசங்கிக்கப்படுவதாகவும் யூகிக்கிறது. [5]குறைந்தபட்சம், மற்றவர்களில் நாம் மாய்மாலம் என்று கருதுபவற்றைக் காண்பது சுலபமாக உள்ளது. இந்தப் புத்தகத்தில் மற்றவர்களை மாய்மாலக்காரார்கள் என்று அழைப்பதில் உள்ள புத்தியற்ற தன்மை பற்றிய எனது விளக்கங்களை “வெற்றியாளர் ... மற்றும் இன்னும் திறைமைசாலி” என்ற பாடத்தில் காணவும். [6]வசனப்பகுதியைத் தொடர்ந்து வரும் குறிப்புகளில் நடைமுறைப் பயன்பாட்டை எடுத்துரைத்தல் என்ற அளவுக்கு நான் குறைந்தபட்சமாக இதைத் தந்துள்ளேன். நீங்கள் வாழும் இடத்தில் உள்ள சமூக ரீதியான, ஒழுக்க ரீதியான மற்றும் மத ரீதியான சூழ்நிலைகளுக்கு ஏற்றாற் போன்று நடைமுறைப் பயன்பாட்டை மேற்கொள்ளுங்கள். [7]இந்தப் பிரிவின் மூன்று துணைக் கருத்துக்கள்* Warren Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 83-86 *என்ற புத்தகத்தில் இருந்து தழுவப்பட்டுள்ளன. [8]நீங்கள் ‘‘மாய்மாலக்காரர்’’ என்ற வார்த்தையின் அர்த்தத்தை மறுகண்ணோட்டமிட “வெற்றியாளர் ... மற்றும் இன்னும் திறைமைசாலி” என்ற பாடத்தில் காணவும். [9]உலகில் நான் வாழும் பகுதியில், ‘‘அவர்கள் தப்பிச் செல்லும் வழிகளைக் கண்டறிந்திருந்தனர்’’ என்று நாங்கள் கூறுவதுண்டு. [10]The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons Ltd., 1971), 431.

*[11]உபாகமம் 6:8, 9 வசனங்கள், தேவனுடைய பிரமாணத்தை இல்லத்தின் தராதரமாக்கும்படிக்கு இருதயத்திலும் மனதிலும் எழுதுவதைப் பற்றிப் பேசுகிறது (யாத். 13:9; உபா. 11:18அ). இருப்பினும், பிரமாணம் செய்யும்படி கூறுபவற்றைச் செய்வதைக் காட்டிலும் அதை ஒரு பெட்டியில் வைத்து அணிந்து கொள்ளுதல் மிகவும் சுலபமாயுள்ளது. தோற்பெட்டிகள் பற்றிய அதிகமான தகவல், “தேவன்மீது அன்புகூரும்படி நமது பிள்ளைகளுக்குப் போதித்தல்”* (Fort Worth, Tex.: Star Publishing Co., n.d.) *என்ற கைப்பிரதியில் தரப்பட்டுள்ளது. [12]நான் இதில் நகைச்சுவையைக் காண்கின்றேன்: ‘‘எனது பெட்டி உங்கள் பெட்டியை விடப் பெரியதாக இருப்பதால், நான் உங்களை விட அதிகமாக ஆவிக்குரியவனாக இருக்கின்றேன்!’’ [13]முந்திய பாடங்களில் நாம், இயேசுவின் மேலாடையினுடைய ‘‘ஓரத்தை’’*

*தொட்டபோது, அவர்கள் அந்தத் தொங்கல்களைத் தொட்டிருக்கலாம் என்று குறிப்பிட்டோம் (மத். 9:20; 14:36).* [14]*பரிசேயர்களின் "பகட்டான காட்சிப் படுத்துதல்களை"ப் பற்றி நீங்கள் பேசும்போது, நீண்ட ஜெபம் செய்தல் போன்ற நமது வேத வசனப் பகுதியில் காணப்படும் மற்ற உதாரணங்களைக் குறிப்பிட விரும்பலாம் (மத். 23:14; மாற். 12:40).* [15]*அமெரிக்காவில், நாங்கள் சிலவேளைகளில் ''வல்லமையின்'' உடையணிதல் பற்றிக் கேள்விப்பட்டுள்ளோம்: ஒருவகை உடையணிந்திருப்பவர் தனிச்சிறப்புக்கு உரியவர் என்று யூகமாய்ச் சுட்டிக் காண்பிக்கும் வகையிலான உடைகள். பரிசேயர்களும் வேதபாரகர்களும் தங்களின் ''வல்லமையின் அங்கிகளை'' அணிந்திருந்தனர்.* [16]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or a Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 313. [17]*இயேசுவை அவரது சீஷர்கள் "ரபீ" என்று குறிப்பிட்டனர் (மத். 26:25; மாற். 9:5; யோவா. 3:2).* [18]*வசனம் 10ஐத் தொடர்ந்து இயேசு, தாழ்மையின் அவசியம் குறித்து முன்பு பேசப்பட்டிருந்த வார்த்தைகளை மீண்டும் கூறினார் (வ. 11, 12; மத். 20:26, 27; மாற். 10:43, 44ஐக் காணவும்).* [19]*பவுல் தாம் போதித்திருந்தவர்களுக்கு ஆவிக்குரிய ''பிதாவாக'' இருந்ததாகத் தம்மைக் குறிப்பிட்டார் (1 கொரி. 4:15) - ஆனாலும் அவர்கள் அப்போதும்கூட, "தந்தையாகிய பவுல்" என்ற பட்டத்தை அவருக்குத் தரவில்லை.* [20]KJV*யில், மத்தேயு 23:14ல் எட்டாவது ஐயோ காணப்படுகிறது, இது* NASB*யிலும் அடைப்புக் குறிக்குள் பட்டியலிடப்பட்டுள்ளது. தொடக்க காலக் கையெழுத்துப் பிரதிகளில் இது மத்தேயு சுவிசேஷத்தில் காணப்படாதிருப்பினும், மாற்குவும் லூக்காவும், அந்த வேளையில் இயேசுவின் கண்டன வார்த்தைகளின் பாகமாயிருந்ததைத் தெளிவுபடுத்தினர். இந்த எடுத்துரைப்பில் நான், இந்த எட்டாவது "ஐயோ"வானது* KJV, NASB *ஆகியவற்றில் மத்தேயு சுவிசேஷத்தில் காணப்படும் இடத்தை உள்ளடக்குவேன்.*

[21]David Smith, *Our Lord's Earthly Life* (New York: G. H. Doran, 1926), 353; quoted in H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 194. [22]*வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள், "ஐயோக்கள்"மீது அவற்றைப் பாக்கியங்களுடன் ஒப்பிட்டு ஒரு மாறுபட்ட அணுகுமுறையைப் பயன்படுத்தினார்* (Wiersbe, 84-86). [23]*லூக்கா 11:52ன் மீதான கூற்றை, "கிறிஸ்துவின் வாழ்வு, 4" என்ற புத்தகத்தில் காணவும்.* [24]*பரிசேயர்கள் "விதவைகளின் வீட்டைப் பட்சித்தது" எவ்வாறு என்பதை நாம் மிகச் சரியாக அறிவதில்லை, ஆனால் நாம் இன்னமும் இவ்விதமான ஒழுக்க நெறியற்ற நடத்தையை ஒரு சில ஏமாற்றுக்கார வழக்கறிஞர்களின் பகுதியில் காண்கின்றோம்.* [25]Coy Roper, "Factors Contributing to the Origin and Success of the Pre-Christian Jewish Missionary Movememt" (Ph.D. diss., University of Michigan, 1988), 20-49. [26]*எபிரெயர்கள்* "of" *என்பதை "இயல்பில் பங்கேற்றல்" என்று அர்த்தப்படும் வகையில் சொற்றொடர்களில் பயன்படுத்தினர். நாவைப் பற்றி இதே விதமான ஒரு கருத்தை யாக்கோபு தமது புத்தகத்தின் 3:6ம் வசனத்தில் பயன்படுத்தினார்.* [27]*புதினா என்பது உணவுக்குச் சுவையூட்டப் பயன்படுத்தப்பட்டது. வெந்தயம் மற்றும் சீரகம் (ஒற்தலாம்) என்பவை சமையலிலும் மருந்துகள் தயாரிப்பிலும் பயன்படுத்தப்பட்டன.* [28]*"பாரமான" என்ற சொற்றொடர் பற்றி இந்தப் புத்தகத்தில் உள்ள "இலேசான" மற்றும் "பாரமான" கற்பனைகளின் மீதான விளக்கங்களைக் காணவும்.* [29]*இந்த உரையில், அவர்களை "குருடரான வழிகாட்டிகள்" என்று இயேசு இருமுறை (வ. 16, 24) குறிப்பிட்டார். இந்தச் சொற்றொடரின் தனித்தன்மை பற்றி மத்தேயு 15:14ல் காணவும்.* [30]*''ஐயோ''க்களுக்கிடையில் கணிசமான அளவு ஒன்றின்மீது இன்னொன்று கவிந்திருத்தல் உள்ளது, ஆனால் இவை ஒவ்வொன்றும் தனித்தனியே குறிப்பிடத் தக்க அளவு முக்கியமானவை என்று கர்த்தர் நினைத்தார்.*

[31]*ஆகையால் இயேசு அவர்களை, "... ஆபேலின் இரத்தம் முதல் ... சகரியாவின்*

இரத்தம் வரைக்கும், பூமியின் மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழிக்கு" கணக்கு ஒப்புவிப்பவர்களாக்கினார் (மத். 23:35). ஆபேலின் மரணம் ஆதியாகமம் 4:8ல் பதிவு செய்யப்பட்டுள்ளது; சகரியாவின் (இவர் சிறிய தீர்க்கதரிசியல்ல) மரணம் 2 நாளாகமம் 24:20-22ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. எபிரெய வேதாகமம் ஆதியாகமத்தில் தொடங்கி, 2 நாளாகமத்துடன் முடிவதால், இது "முதலில் இருந்து கடைசி வரைக்கும்" என்று கூறுவதற்குச் சமமானதாக உள்ளது. [32]வசனம் 34க்கு, அப். நடபடிகள் புத்தகம் ஒரு நல்ல விளக்கவுரையாக உள்ளது. ''உங்கள் ஆலயங்களில் வாரினால் அடித்து" என்ற சொற்றொடரைக் கவனிக்கவும். பவுல் அடிக்கப்பட்ட நிகழ்ச்சிகளில் சில (2 கொரி. 11:23) அநேகமாக ஜெப ஆலயங்களில் நடைபெற்றிருக்கலாம். [33]மத்தேயு 23:37-39ன் வார்த்தைகள், இதற்கு முன், இயேசு பெரேயாவில் இருந்தபோது, பேசப்பட்டவைகளைத் (லூக். 13:34, 35) திரும்பக் கூறுவதாக உள்ளன. [34]கோழிகள் தங்கள் சிறகுகளின் கீழ் தங்கள் குஞ்சுகளைச் சேர்த்துக் கொள்வதை நான் கண்டிருக்கின்றேன், ஆனால் அமெரிக்காவில் பல இளைஞர்கள் இதைக் கண்டிருப்பதில்லை. உங்கள் உரையைக் கேட்பவர்களும் இதே போல் இருந்தால், இருதயத்தைத்தொடும் இந்தக் காட்சியைச் சித்தரிக்க நீங்கள் சற்று நேரம் எடுத்துக்கொள்ள விரும்பலாம். [35]சங்கீதம் 48:1, 8ஐக் காணவும். [36]வசனம் 38ஐ எரேமியா 12:7உடன் ஒப்பிடவும். [37]இந்தப் புத்தகத்தில் லூக்கா 19:41-44ன் மீதான விளக்கவுரைகளை காணவும். (தேவாலயம் உட்பட) எருசலேமுக்கு வரவிருந்த அழிவு இந்தத் தொடரின் அடுத்த சில பாடங்களில் அதிகம் முழுமையாகக் கலந்துரையாடப்படும். [38]நினிவே நகரின் அழிவை யோனா முன்னு ரைத்திருந்தார் (யோனா 3:4), ஆனால் மக்கள் மனந்திரும்பியபோது, தேவன் அந்த நகரை அழிக்கவில்லை (யோனா 3:10). தேவன் கிருபையுள்ள தேவனாயிருக்கின்றார். [39]சங்கீதம் 118 ஒரு மேசியாத்துவ சங்கீதமாகக் கருதப்பட்டது (அப். 4:11ஐக் காணவும்). அந்த நாளின் முற்பகுதியில் கிறிஸ்து சங்கீதம் 118ல் வசனம் 22ஐ மேற்கோள் காண்பித்திருந்தார் (மத். 21:42), இது தலைவர்கள் அவரைப் புறக்கணிப்பார்கள் என்று முன்னுரைத்திருந்தது. [40]மத்தேயு 23:39 தெளிவற்றதாக உள்ளது. இது, "நான் சென்ற பின்பு, மீண்டும் *நியாயத்தீர்ப்புக்கு* வரும்வரைக்கு (இது எருசலேமின் அழிவைக் குறித்தது) என்னைக் காணமாட்டீர்கள்'' என்று அர்த்தப்படலாம். இருப்பினும், சங்கீதம் 118:26 எதிர்மறையானதாக இன்றி, நேர்மறையானதாக உள்ளது. இவ்விதமாக நான், இவ்வசனத்திற்கு ஒரு நேர்மறையான விளக்கத்தைக் கொடுத்துள்ளேன். அதே வேளையில், நகரத்தாரின் கடின இருதயங்கொண்ட தன்மையை மனதில் கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. இயேசுவினால் முன்மொழியப்பட்ட நிலையை அவர்கள் நிறைவேற்றுவதற்குச் சிறிதளவே நம்பிக்கை இருந்தது. இவ்வசனம் பற்றிய ஒரு கடைசிக் குறிப்பு பின்வருமாறு: இது, ஆயிரம் ஆண்டு அரசாட்சி செய்வதற்கு இயேசு ஒரு நாளில் பூமிக்கு வருவார், அவ்வேளையில் அவர் எருசலேம் நகரத்தாரால் வரவேற்கப்படுவார் என்று *போதிப்பதில்லை.* R. T. பிரான்ஸ் அவர்கள், "நீங்கள் கூறும் வரைக்கும் என்று கிரேக்க மொழியில் விளக்கப்படுத்தப்பட்ட வார்த்தைகள் உறுதியான முன்னுரைத்தல் என்பதற்கு மாறாக, திட்டவட்டமற்ற சாத்தியக்கூறு என்பதாகவே உள்ளது; ... அந்த நிலைப்பாட்டை நிறைவேற்றுவதற்கான வாக்குத் தத்தம் எதுவுமே இல்லை" என்று எழுதினார். மற்றும் இவர் "எதிர்கால மனந்திரும்பு தல் பற்றிய ஒரு முன்னுரைத்தல் என்பது, அதிகாரம் 23ன் சிந்தனையோட்டம் முழுவதற்குமே (இதில்தான் உச்சக்காட்சியுள்ளது) புறம்பானதாக இருப்பது மட்டுமன்றி, வரப்போகிற நியாயத்தீர்ப்பைப் பற்றியதான அதிகாரம் 24ல் இஸ்ரவேலின் கடைசி வாய்ப்பைப் பற்றி மீண்டும் மீண்டுமாகவும், தேவனுடைய அகில உலக மக்கள் பற்றியும் பேசுகின்ற மத்தேயு சுவிசேஷத்தின் [முழுமையான]

*நோக்கங்களுக்கும் புறம்பானதாக உள்ளது (8:11-12; 12:38-45; 21:40-43; 22:7; 23:32-36; முதலியன) ... ஏனெனில், விளங்காத் தன்மையுடன் தொடங்குகின்ற இவ்வசனம் இதை வசனம் 38ல் தேவனுடைய வீட்டில் அது* [*இஸ்ரவேல்*] *கைவிடப்படுதலுடன் இணைக்கிறது" என்றும் குறிப்பிட்டார்* (R. T. France, *The Gospel According to Matthew* [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985], 332-33).

[41]*முடிவு நடைமுறைப் பயன்பாட்டைப் பற்றிய ஒரு சில சாத்தியக்கூறுகளை நான் பட்டியலிட்டுள்ளேன். நான் பட்டியலிட்டுள்ளவற்றில் ஒன்றை நீங்கள் விரித்துரைக்க முடியும் அல்லது உங்கள் உரையைக் கேட்கும் கூட்டத்தாருக்கு அதிகம் பொருத்தமான பிறவற்றை நீங்கள் பட்டியலிட முடியும்.* [42]*கிறிஸ்தவரல்லாதவர்கள் எவ்வாறு பதில்செயல் செய்ய வேண்டும் என்றும் (மாற். 16:15, 16; அப். 2:38), உண்மையற்ற நிலையில் உள்ள கிறிஸ்தவர்கள் எவ்வாறு தேவனிடம் திரும்பக்கூடும் என்றும் (அப். 8:22; 1 யோவா. 1:9; யாக். 5:16) கூறுவதற்கு நீங்கள் விரும்புவீர்கள்.*